



அருள்மிகு தையல்நாயகி அம்பாள் உடனாய வைத்தியநாதர்

செக்காலை, காரைக்குடி.

உ



அருள்மிகு உண்ணாமுலை அம்பாள் உடனாய அண்ணாமலையார்


பொது விண்ணப்பம்

எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல பரம்பொருளே ! எவ்வுருவில், எப்பெயரில், எந்நேரத்தில், இறைவா, நீ இருந்தாலும் எங்கள் பணிவான விண்ணப்பத்தை உமது திருவடியில் சமர்ப்பிக்கின்றோம்.

நாங்கள் வசிக்கப் பூமியும், சுவாசிக்கக் காற்றும், வணங்கச் சென்னியும், காணக் கண்களும், கேட்கச் செவியும், சிந்திக்க மனமும், வாழ்த்த வாயும், கூப்பித்தொழக் கரங்களும் திருக்கோவில் வர கால்களும் அருளிய பரம்பொருளே ! உமது ஈடு இணை இல்லாத கருணைக்கு எங்களது நன்றியறிதலான திருமுறை வழிபாட்டை வணக்கத்துடன் சமர்ப்பிக்கின்றோம். இந்த வழிபாட்டில் கலந்துகொள்ள இயலாத அடியார்கள் சார்பாகவும் நாங்கள் உமது திருவடியைத் தொழுகின்றோம்.

இம் மண்ணுலகில், உன் கருணையினால் மானிடப்பிறவி பெற்றுள்ள பலரும் அவரவர் செய்த வினையின் பயனாய் பலவிதமான அல்லல்களில் உழல்கிறார்கள். இந்த அல்லல்கள் நீங்க உமது பொன்னார் திருப்பாதங்களில் இதனைச் சமர்ப்பிக்கின்றோம்.

இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு அடியார்கள் எல்லோரும் நீண்ட ஆயுளும், சகல செல்வங்களும் பெற்று இன்புற்று வாழ அருள் புரிவீராக !

திருச்சிற்றம்பலம்

மகேசுவர பூஜை – வேண்டுதல் – ஆசிர்வாதம்

அநாதி முதற்பெருங்கடலாகிய சிவபெருமான் எல்லா உயிர்களும் வழிபட்டு உய்யும் பொருட்டுத் திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கள் அனைத்திலும் நித்திய நைமித்திய வழிபாடுகளெல்லாம் வேத சிவகாமப்படி சிறப்பாக நடந்துவரும் பொருட்டு அருள்புரிவீராக.

– அரகர அரகர

விபூதி உருத்திராக்க தாரணம், பஞ்சாட்சர ஜபம், வேத சிவகாமப் படனம், தேவாரத் திருமுறைப் பாராயணம், ஆன்மார்த்த சிவபூஜை ஆகிய சிவபுண்ணியச் செயல்கள் நாடெங்கும் பரவி ஓங்கும் பொருட்டு அருள்புரிவீராக.

– அரகர அரகர

மாதம் மும்மழை பெய்து, தான்யம் முதலிய எல்லா வளங்களும் செழித்தோங்கும் பொருட்டு அருள்புரிவீராக.

– அரகர அரகர

இந்த தானத்தில் எப்போதும் அடியார்களுக்கு மகேசுவர பூஜை நடந்து வரும் பொருட்டு அருள்புரிவீராக.

– அரகர அரகர

சிவ புண்ணியச் செல்வர் .... அவர்களும் அவருடைய குடும்பத்தார், உறவினர், நண்பர்கள் ஆகியோர்களும் நோயற்ற வாழ்வும் சகல செல்வங்களும், தேக ஆரோக்யமும், நீண்ட ஆயுளும், குருலிங்க சங்கம பக்தியும், சிவஞானமும் மென்மேலும் பெற்று வாழ அருள்புரிவீராக.

– அரகர அரகர

[அடியார்கள் அனைவரும் திருவமுது செய்தருளுக]

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.

அல்லல் என் செயும் அருவினை என் செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடி பத்திற
மிதி கொள் சேவடி சென்றடைந் துய்மினே.



கூத்தப்பெருமாள்

ஓங்கு ஒளியாய் அருள்ஞான மூர்த்தி ஆகி
உலகம் எல்லாம் அளித்து அருளும் உமையம்மை காணத்
தேம்கமழும் மலர் இதழி திங்கள் கங்கை
திகழ் அரவம் வளர்சடைமேல் சேரவைத்து
நீங்கள் அரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்று இமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உற வணங்கிப் போற்றல் செய்வாம்.

சிவகாமி அம்மை

பரந்த பரா பரை, ஆதி பரனது இச்சை
பரஞானம் கிரியை, பரபோக ரூபம்
தருமு கருணை உரு ஆகி, விசுத்தா கத்தத்
தனுகரண புவன போகங்கள் தாங்க
விரிந்த உபாதானங்கள் மேவி, ஒன்றாய்
விமலமாய்; ஐந்தொழிற்கும் வித்தாய், ஞாலத்து
அரந்தை கெட, மணி மன்றுள் ஆடல் காணும்
அன்னை அருள் பாதமலர் சென்னி வைப்பாம்.

விநாயகர் துதி



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர்வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

முதலாம் திருமுறை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

இரண்டாம் திருமுறை

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன் திருஆலவாயான் திரு நீறே

மூன்றாம் திருமுறை

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

நான்காம் திருமுறை

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்.
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

ஐந்தாம் திருமுறை

வேதநாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதிநாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே

ஆறாம் திருமுறை

ஓசையொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ

ஏழாம் திருமுறை

பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!
எத்தால் மறவாதே நினைக்கின்றேன்! மனத்துன்னை
வைத்தாய்! பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்துறையுள்
அத்தா! உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே

******

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்க்யதே – எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

எட்டாம் திருமுறை - திருக்கோவையார்

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தை உள்ளும்
உறைவான் உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு என் கொலாம் புகுந்து எய்தியதே

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அறிவளர் உள்ளத்து அனந்தக் கனியே!
அம்பலம் ஆட ரங்காக
வெளிவளர் தெய்வக்கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

பத்தாம் திருமுறை

திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

பதினோறாம் திருமுறை

அற்புதத் திருவந்தாதி

யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் – யானேயக்
கைம்மாவுரி போர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக்கு ஆளாயினேன்

பன்னிரெண்டாம் திருமுறை

பெரிய புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.



போற்றித் திரு அகவல்

தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

ஆடக மதுரை அரசே போற்றி !
கூடல் இலங்கு குருமணி போற்றி !

தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி !
இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி !

ஐயா போற்றி ! அணுவே போற்றி !
சைவா போற்றி ! தலைவா போற்றி !

வானோர்க்கு அரிய மருந்தே போற்றி !
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி !

அருமையில் எளியஅழகே போற்றி !
கருமுகிலாகிய கண்ணே போற்றி !

இடைமருது உறையும் எந்தாய் போற்றி !
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி !

ஆரூர் அமர்ந்த அரசே போற்றி !
சீரார் திருவையாறா போற்றி !

அண்ணாமலை எம் அண்ணா போற்றி !
கண்ணார் அமுதக் கடலே போற்றி !

ஏகம் பத்து உறை எந்தாய் போற்றி !
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி !

பாராய்த்துறை மேவிய பரனே போற்றி !
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி !

சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி !
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி

காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி! போற்றி !

******

அருணாசலசிவ! அருணாசல சிவ! அருணாசல சிவ! அருணாசலா
அருணாசலசிவ! அருணாசல சிவ! அருணாசல சிவ! அருணாசலா

அண்ணாமலையானே! எங்கள் அன்பில் கலந்தோனே!
உண்ணாமலை நாதா! எங்கள் உள்ளம் நிறைந்தோனே!

மாணிக்கவாசகர் மலர் வணக்கம்

வாதவூர் தந்த மறையோய் போற்றி !
வேதமோடு ஆகம வித்தே போற்றி !
பாண்டி நாட்டு அமைச்சராம் பண்ணவ போற்றி !
தூண்டா விளக்கின் சுடரே போற்றி !
தென்னவன் பிரமராயனே போற்றி !
மன்னவன் கூடலான் மதித்தவ போற்றி !
பெருந்துறைச் சிவனடி பேணுவாய் போற்றி !
குருந்தடி கோயில் செய்குரிசிலே போற்றி !
அரன் அவன் அருள்பெறும் அடிகாள் போற்றி !
கரமலர் சிரம் தொடக் கனிந்தாய் போற்றி !

குருபரன் நோக்கால் குளிர்ந்தாய் போற்றி !
திருவடித் தீக்கையால் சிறந்தாய் போற்றி !
பழுதறு ஞானம் படைத்தாய் போற்றி !
அழுதடி அடைந்த அன்பனே போற்றி !
கண்ணீர் பெருக்கிக் கசிவாய் போற்றி !
வெண்ணீறு அணியும் விகிர்தா போற்றி !
அக்கநல் மணி அணி அறவோய் போற்றி !
மிக்க நல்தமிழ்தரு வேதியா போற்றி !
தெய்வப் பண்ணிசை தேவே போற்றி !
சைவ நெறிக்கு ஒரு தலைவா போற்றி !

பிரான் வந்து ஆட்கொளப் பெற்றவ போற்றி !
தராதலத்து ஒருதனித் தாபத போற்றி !
முற்றத் துறந்த முனிவா போற்றி !
சிற்றம்பலமாய் திகழ்வாய் போற்றி !

அடியார் குழுவின் அரசே போற்றி !
குடிமுழுது ஆளக்கொண்டோய் போற்றி !
சித்தம் அழகிய சேவக போற்றி !
புத்திக்கு ஒருதனிப் பாவல போற்றி !
பல்வகை யாப்பும் படைத்தனை போற்றி !
செல்கதிக்கு உதவும் தேசிக போற்றி !

பாடவும் ஆடவும் பரவுவாய் போற்றி !
கூடவும் வீடவும் கூவுவாய் போற்றி
தத்துவ முறையறி சத்துவ போற்றி !
முத்தமிழ்த்துறை வல முத்தனே போற்றி !
மூலபண்டார மொய்ம்பனே போற்றி !
சீலம் இஃது என்றருள் தெளிவே போற்றி !
புத்தரை வென்றருள் புனிதா போற்றி !
முத்தி நெறிக் கவி மொழிந்தவ போற்றி !
எட்டாம் திருமுறை இசைத்தனை போற்றி !
பட்டி மண்டபம் ஏறினை போற்றி !

பண்ணார் பாடல் படைத்தாய் போற்றி !
தண்ணார் சிவத்தமிழ் தருவாய் போற்றி !
பொன்னம்பலத்தைப் போற்றுவாய் போற்றி !
கன்நெஞ்சு உருக்கும் கவிவல போற்றி !
இரும்பார் மனத்தை ஈர்ப்பாய் போற்றி !
கரும்பார் பாசுரம் கவிப்பாய் போற்றி !
குருந்தமர் சிவனருள் குளித்தாய் போற்றி !
பெருந்தவர் விழை பதம் பெற்றாய் போற்றி !
ஆகமச் சீர்த்தி அறைந்தாய் போற்றி !
மோகனப் பாடல் மொழிந்தாய் போற்றி !

மும்மலம் அறுக்கும் மொய்ம்பனே போற்றி !
செம்மைச் சிவபதச் செல்வனே போற்றி !
தேன்நிகர் பாஅருள் தெய்வமே போற்றி !
ஆனிநல் மகம் வீடு அடைந்தவ போற்றி !
அகஇருள் சீய்க்கும் ஆதவ போற்றி !
நிகர்இலா இருவினை நீற்றினை போற்றி !
அகவல் நான்கினை அருளினை போற்றி !
தகவுடைச் சதகம் தந்தனை போற்றி !
நீத்தல் விண்ணப்பம் நிகழ்த்தினை போற்றி !
ஏத்துயர் பாவை இசைத்தனை போற்றி !

கழல் அம்மானை கழறினை போற்றி !
எழிற் பொற்சுண்ணம் இடித்தனை போற்றி !
உரவு கோத்தும்பியாய் ஊதினை போற்றி !
குரவு தெள்ளேணம் கொட்டினை போற்றி !
வினாவிடைச் சாழல் விளம்பினை போற்றி !
அனாதி அவன்திறம் அறைந்தனை போற்றி !
குளிர் பூவல்லி கொய்தனை போற்றி !
அளிதரும் உந்தீ ஆடினை போற்றி !
சிவன் தோள் நோக்கம் சேர்த்தனை போற்றி !
அவன் இசைத்து ஊசல் ஆடினை போற்றி !

அன்னே எனும் பத்து ஆக்கினை போற்றி !
இன்குயில் கூவ ஏவினை போற்றி !
உள்ள தசாங்கம் உரைத்தனை போற்றி !
பள்ளி எழுச்சி பாடினை போற்றி !
கோயில் பதிகம் கூறினை போற்றி !

மேயதை மீளவும் விதந்தனை போற்றி !
செந்திலாப்பத் தினைச் செப்பினை போற்றி !
பத்தியால் அடைக்கலம் பகர்ந்தனை போற்றி !
ஆசைப்பத்து உரைத்து அருளினை போற்றி !
காசில் அதிசயம் கண்டனை போற்றி !

பொல்லா மணியை புணர்வாய் போற்றி !
சொல்லினை வாழாப் பத்தினை போற்றி !
அருள்தனை வேட்டருள அத்தா போற்றி !
திருவளர் காட்சியைத் தெரிப்பாய் போற்றி !
தில்லையம்பலம் காண் தெளிவினை போற்றி !
எல்லையில் பிரார்த்தனை இசைத்தனை போற்றி !
குழைத்த உணிருணி கூறினை போற்றி !
தழைத்த அச்சம் சாற்றினை போற்றி !
பாண்டிப் பதிப்பகம் பகர்ந்தனை போற்றி !
ஈன்டிப் பிடித்த பத்து இயம்பினை போற்றி !

இலங்கு வேசறவு எய்தினை போற்றி !
புலம்பல் முப்பா புலம்பினை போற்றி !
குலாவில் மகிழ்வு கூர்ந்தனை போற்றி !
நிலாவும் அற்புதம் நினைந்தனை போற்றி !
சென்னி சிவனடி சேர்ப்பாய் போற்றி !
மன்னுசீர் வார்த்தை வடிப்பாய் போற்றி !
எண்ணப் பதிகம் ஏத்தினை போற்றி !
நண்ணும் யாத்திரை நவின்றனை போற்றி !
திருப்படையெழுச்சி திரட்டுவாய் போற்றி !
விருப்புடன் வெண்பா விரித்தனை போற்றி !

பண்டாய நான்மறை பரப்பினை போற்றி !
எண்படை ஆட்சி எடுத்தனை போற்றி !
இச்சகத்து ஆனந்தம் எய்தினை போற்றி !
அச்சோ எனவியப்பு அடைந்தனை போற்றி !
திருவாசகம் அருள் தேவே போற்றி !
திருப்பெருந்துறையுறை சிவமே போற்றி !
அருளார் கோவைக்கு அரசே போற்றி !
தில்லைக் கூத்தன் திருக்கை மலரால்
எல்லையில் ஆர்வமோடு எழுதிவைத்த
திருவாசகம் என்னும் சிவபுராணந்தன்னை
அருள் மணிவாசகன் அடிமலர் போற்றியே !

திருச்சிறம்பலம்

வாதவூரார் வாசகமே வையகத்தவர் தம்செவி கவரும்
ஏத மருவா மலரடியே எந்த ஞான்றும் மனம் கவரும்
சீத மருவு செயல் ஒன்றே தெளியச் செயல் எல்லாம் கவரும்
போத மருவு திருமேனிப் பொபே விழி எல்லாம் கவரும்

வான் கலந்த மாணிக்கவாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற் கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதவே.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க !
மலிவளம் சுரக்க ! மன்னன்
கோன்முறை அரசு செய்க !
குறைவில்லாது உயிர்கள் வாழ்க !
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க !
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம் !

****


தொகுத்து வழங்கிய

திரு. **தெ. சொக்கலிங்கம் செட்டியார்** அவர்களுக்கு

நன்றி.

S.LAKSHMANAN - UNNAMALAI
PSL Nagammai Achi House,
9/15, Pillaiyar Koil,
South 4th Street, Sekkalai,
Karaikudi - 630 002.
Phone : 04565 - 229240

நால்வர் பொற்றாள் போற்றி !



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசகர்